# ??????????? ??? ??????????? ????? ??????????? ???????? ?????????? ????????? – ??????????????




ஆண்டான் அடிமை எனும் மனநிலையில் இருந்து, ஒரே நாட்டிற்குள் ஒற்றுமையாக வாழ விரும்பும் தமிழ் மக்களுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் என ஆட்சியாளர்களிடம் தான் கோருவதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு இன்று (வியாழக்கிழமை) கருத்து தெரிவிக்கும்போதே எம்.கே.சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், “எந்த அரசாங்கத்தினாலும் தமிழ் மக்களின் நினைவேந்தும் உரிமையை தடுக்க முடியாது.

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட ஆட்சியாளர்களிடம் சொல்ல விரும்புவது, தமிழர்களின் உரிமைகளை தடுக்கும் உரிமை உங்களுக்கு இல்லை. எனவே நாங்கள் நினைவேந்தல் செய்வதற்கு இடையூறு விளைவிக்காது இருக்க வேண்டும்.

ஒரே நாட்டினுள் ஒற்றுமையாக வாழவே தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள். எனவே தமிழ் மக்களுக்கு இடையூறு விளைவிக்காமல் நீங்கள் ஆளுபவர்கள், தமிழர்கள் அடிமைகள் எனும் மனநிலையில் இருந்து மாறுங்கள்” என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ????????????? ??????? ????????? ????
# ???????????? ???????????????? ???????!



யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் உயிரிழந்த வீட்டை சுற்றி உள்ள சிசிடிவி கேமராக்களின் பதிவுகளையும் மாணவன் பாவித்த கையடக்கத் தொலைபேசியின் உரையாடல் பதிவுகளையும் ஆராயுமாறு யாழ்ப்பான நீதிவான் நீதிமன்றம் பொலிஸாருக்கு கட்டளையிட்டுள்ளது.

உயிரிழந்த மாணவனின் வழக்கு இன்று நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றது. இதன்போது நீதிவான் மேற்படி கட்டளையை பிறப்பித்துள்ளதாக பாதிக்கப்பட்ட மாணவனின் சார்பில் மன்றில் ஆஜர் ஆகிய சட்டத்தரணி சுகாஷ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்தூவ பீட மாணவன் உயிரிழந்தமை தொடர்பில் பலத்த சந்தேகங்கள் இருப்பதாக உறவினர்களால் தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் குறித்த மாணவரின் சகோதரன் நீதி கோரி ஜனாதிபதி மற்றும் பிரதமர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு கடிதம் ஒன்றையும் அண்மையில் அனுப்பியிருந்தார்.

இவ்வாறான நிலையில் யாழ் நீதிமன்றில் இன்று நடைபெற்ற குறித்த வழக்கில் மாணவனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் அது தொடர்பான விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட மாணவனின் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் மன்றில் தெரிவித்திருந்தார்.

குறித்த வழக்கை விசாரித்த நீதிபதி மாணவன் வசித்த வீட்டை சுற்றியுள்ள இடங்களில் சிசிடிவி கேமரா இருந்தால் அதன் ஒளிப்பதிவை எடுக்குமாறும் அதே நேரம் குறித்த மாணவனின் கையடக்கத் தொலைபேசி பதிவுகளையும் ஆராய்ந்து எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்

---

# ?????????????? ????? ??.???????????? ??????????? ?????




முப்பதெழுத்தில் அடங்கியிருக்கிறது தமிழின் உயிரும் மெய்யும் ஆனால் ஆறெழுத்தில் அடங்கியிருக்கிறது தமிழரின் உயிரும் மெய்யும் – கவிஞர் வாலி


நமது ஈழநாடு
www.namathueelanadu.com


நமது ஈழநாடு
www.namathueelanadu.com


நமது ஈழநாடு
www.namathueelanadu.com


நமது ஈழநாடு
www.namathueelanadu.com















- 
- 





